Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No.5/18

**Deposition of P.W.1**

| | | |
|---|---|---|
| Name | : | அனு |
| Husband's Name | : | மணிகண்டன் |
| Village | : | வெட்டன்விடுதி |
| Taluk | : | கறம்பக்குடி |
| Caste | : | |
| Calling | : | சுய தொழில் |
| Religion | : | இந்து |
| Age | : | **36/2020** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 18.12.2020**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வெட்டன்விடுதியில் வசித்து மளிகை கடை நடத்தி வருகிறேன். என்னுடைய இரண்டாவது மகனின் பெயர் மாதேஷ் ஆகும். கடந்த **03.01.2017** ம் தேதி அன்று மாலை **4.15** மணி அளவில் கறம்பக்குடியில் இருந்து ஆலங்குடி செல்லும் சாலையில் ராமையா என்பவர் வீட்டிற்கு எதிர் புறம் உள்ள சாலையில் நான் இடது புறமாக நின்று கொண்டிருந்தேன். எனது முதல் மகள் சாதனா என்பவரும் **8** வயது உள்ள என்னுடைய இரண்டாவது மகன் மாதேஷ் என்பவரும் சாலையின் எதிர்புறத்தில் இருந்தார்கள். அவர்கள் இருவரும் ராமையா வீட்டிற்கு தண்ணீர் குடித்துவிட்டு சாலையை கடப்பதற்காகவும் எங்கள் வயலுக்கு வருவதற்காகவும் நின்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது ஆலங்குடியில் இருந்து கறம்பக்குடி நோக்கி இருசக்கர வாகனமான **Hero Passion pro** என்ற வண்டியில் அதிவேகமாக லெட்சுமணக்குமார் என்பவர் ஓட்டி வந்து என் மகள் மாதேஷ் என்பவர் மீது மோதியதில் மாதேஷ்க்கு தலை மற்றும் கால் கை மற்றும் வலது பின் தலையில் அடிபட்டு தூக்கி எறியப்பட்டார். ஓடிப்போய் பார்த்த போது என் மகன் மயக்க நிலையில் கீழே கிடந்தார். காயம் அடைந்த என் மகனை இருசக்கர வாகனத்தில் ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருச்சி நியூரோ ஒன் மருத்துவமனைக்கு சிகிச்கைக்கு சேர்த்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.**1** ஆகும். எனது மகன் **07.01.2017** ம் தேதி சிகிச்சை பலன் இன்றி இறந்து போனார். மேற்படி விபத்திற்கு எதிரி வேகமாக வாகனத்தை ஓட்டிவந்தது தான் காரணம். மெதுவாக வாகனத்தை ஓட்டி வந்திருந்தால் விபத்தை தவிர்த்து இருக்கலாம்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**ம.வி இல்லை**

Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No.5/18

**Deposition of P.W.2**

| | | |
|---|---|---|
| Name | : | ராஜ்குமார் |
| Father's Name | : | லெட்சுமணன் |
| Village | : | மணக்கொல்லை |
| Taluk | : | கறம்பக்குடி |
| Caste | : | |
| Calling | : | ஓட்டுநர் |
| Religion | : | இந்து |
| Age | : | **43/2020** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 18.12.2020**

**முதல் விசாரணை**

நான் தற்போது மணக்கொல்லையில் வசித்து சொந்தமாக லாரி வைத்து ஓட்டி வருகிறேன். அ.சா.1 அனு எனது தம்பி மனைவி ஆவார். 03.01.2017 ம் தேதி அன்று மணக்கொல்லையில் நான் இருந்தேன். அப்பொழுது ராமையா வீட்டு அருகில் இருந்து குழந்தை அலறல் சத்தம் கேட்டு ராமையா வீட்டிற்கு சாலைக்கு அருகே வந்து பார்த்தேன். அப்பொழுது எனது தம்பி மகன் மாதேஷ் என்பவர் சாலையில் அடிபட்டு ஆலங்குடி - கறம்பக்குடி சாலையில் இடது ஓரமாக அடிபட்டு கிடந்தார். சாலையில் **Hero Passion pro** இருசக்கர வாகனம் இருந்தது. அதனை பழவேல் மகன் லெட்சுமணக்குமார் என்பவர் ஓட்டிவந்தவர் அங்கிருந்தார். நான் அங்கிருந்த அ.சா.1 டம் விபரம் கேட்ட போது எதிரி வேகமாக வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியதாக என்னிடம் தகவல் தெரிவித்தார். காயம் அடைந்த மாதேஷ் என்பவரை பார்த்த போது பின் தலை மேல் பல் வரிசை உடைந்தும் இடது கால் உடைந்தும் மயக்கமான நிலையிலும் இரத்த வடிந்த நிலையிலும் இருந்த அவரை இருசக்கர வாகனத்தில் ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மேல் சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். மருத்துவர்கள் மேல் சிகிச்சைக்காக திருச்சி தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கு 5 நாட்கள் சிகிச்சையில் இருந்து எனது தம்பி மகன் மாதேஷ் சிகிச்சை பலன் இன்றி இறந்து போனார். இது சம்மந்தமாக எனது தம்பி மனைவி அ.சா.1 புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**ம.வி இல்லை**

Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No.5/18

**Deposition of P.W.3**

| | | |
|---|---|---|
| Name | : | கோவிந்தராஜ் |
| Father's Name | : | ராமசாமி |
| Village | : | மணக்கொல்லை |
| Taluk | : | கறம்பக்குடி |
| Caste | : | |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | **52/2020** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 18.12.2020**

**முதல் விசாரணை**

நான் தற்போது மணக்கொல்லையில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என் வயலுக்கு அருகே மணிகண்டன் என்பவருக்கு விவசாய நிலம் உள்ளது. கடந்த **03.01.2017** ம்தேதி அன்று மாலை **4** மணி அளவில் எனது வயலில் நான் வேலை செய்து கொண்டிருந்தேன். கறம்பக்குடி - ஆலங்குடி செல்லும் சாலை எனது வயலுக்கு அருகே உள்ளது. **8** வயது உள்ள மாதேஷ் என்ற சிறுவனும் அவருடைய சகோதரி ஒருவரும் ராமையா என்பவர் வீட்டில் தண்ணீர் குடித்துவிட்டு சாலையை கடப்பதற்காக தெற்கு பகுதியில் சாலையில் நின்று கொண்டிருந்தார்கள். ஆலங்குடியில் இருந்து கறம்பக்குடி நோக்கி சாலையில் அதிவேகமாக **Hero Passion pro** வை பழனிவேல் மகன் லெட்சுமணக்குமார் ஓட்டி வந்து மாதேஷ் மீது மோதியதில் தூக்கி எறியப்பட்டார். அதில் அவருக்கு தலை அடிபட்டு பல் உடைந்து விட்டது. காயம் அடைந்து கிடந்த மாதேஷை இருசக்கர வாகனத்தில் ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மேல் சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். மருத்துவர்கள் மேல் சிகிச்சைக்காக திருச்சி தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கு **5** நாட்கள் சிகிச்சையில் இருந்து மாதேஷ் சிகிச்சை பலன் இன்றி இறந்து போனார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.